செ.வெ.எண்: 422/2016 நாள்: 05.07.2016

# பத்திரிகை செய்தி

பறக்கையில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தமிழ்நாடு அரசு ஆத்மா திட்டத்தில் கால்நடை வளர்ப்போருக்கு நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சியை அளித்து வருகிறது.

இராஜாக்கமங்கலம் வட்டத்தில் கடந்த 17-ம் தேதி நடைபெற்ற பயிற்சியை வேளாண்மைதுறை இணை இயக்குநர் திரு. சந்திரசேனன்நாயர் தொடங்கி வைத்தார். துணை இயக்குநர் கலாவதி ஆத்மா திட்டத்தை பற்றி விளக்கி பேசினார். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. பயிற்சி மையத்தின் தலைவர் திரு. ரவிமுருகன், உதவிப்பேராசிரியர் திரு. மதன்மோகன் ஆகியோர் நவீன தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி அளித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் திரு. நிஜாமுதீன், பறக்கை பஞ்சாயத்து தலைவர் திரு. சுந்தார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார். நேற்று தோவாளை வட்டம் திருமலைபுரத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 23 தாழ்த்தப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.